திரு. எஸ். அக்கினிராஜு : தலைவரவர்களே, இப்படிப்பட்ட விதைப் பண்ணைகளில, செடிப்பண்ணைகளில் விவசாயிகளுக்குத் தேவைப்படும் " க்ளிரிசீடியா, ஸெஸ்பேனியா " போன்ற செடிகளை வளர்த்துக் கொடுப்ப தற்குத் திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : போதுமான தண்ணீர் இல்லாததால் அதை அமல் நடத்துவது கஷ்டம்.

அரிசன கூட்டுப் பட்டாதார்கள்

*124 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தாழ்த்தப் பட்டோர் நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

ஹரிஜன மக்களுக்குக் கொடுக்கப்படும் பலவிதமான மானியப் பணத்தை ஜாயின்ட் பட்டா இருப்பவர்களுக்கு கொடுக்காததன் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரிசன நல இலாகாவினரால் அரிசன மக்களுக்குக் கொடுக்கப்படும் பலவிதமான மானியப் பணம் ஜாயின்ட் பட்டா இருப்பவர்களுக்கும் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. கரு. சிமைச்சாமி : சார், கூட்டுப்பட்டா இருப்பவர்களுக்கும் கொடுப்பதாக அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அதுமாதிரி கொடுக்கப் படுவதில்லை. சில இடங்களில் அவ்வாறு கிடைப்பது குதிரைக் கொம்பாக இருக்கிறது. ஆனால் அமைச்சரவர்கள் இங்கு கிடைப்பதாகச் சொல்லி விட்டார்கள். ஆனால் அங்கு கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் இது சம்பந்தமாக நல்லதொரு உத்தரவை கலெக்டர்களுக்குத் தெரிவித்து அதற்கு வேண்டியதைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கூட்டுப்பட்டாக் களுக்கு வேறு உரிமையாளர்களும் ஒப்புதல் தர வேண்டும். தரவில்லை யென்றால் சிக்கல் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. சிக்கல்களைப்பற்றி சர்க்கார் கவனத்திற்குக் கொண்டு வந்தால் விரைவில் நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு கே. சகாதேவ கவுண்டர் : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்தக் கூட்டு பட்டாதாரர்களுக்கு சர்க்காரால் வழங்கப்படுகிற மானியங்களை யும் கடன்களையும் பெறுவதற்கு மிகவும் சிரமப்பட வேண்டி இருக்கிறது. கூட்டுப் பட்டாதாரர்கள் ஒருவருக்கொருவர் சம்மதம் கொடுக்க மறுக்கிறார் கள். அதோடு மட்டுமல்ல, ஒரு கிராமத்தில் 100க்கு 90 பங்கு கூட்டுப் பட்டாக்களாக இருக்கின்றன. எல்லோரும் ஒன்று சேர்ந்து கூட்டுப் பட்டாதாரர்கள் ஆகி விடுகிறார்கள். அவைகளை அரசாங்கம் கவனித்து நடவடிக்கை எடுத்து, கூடுமான வரையில் இந்தக் கூட்டு பட்டாக்களை தாலுகா ஆபீஸ்கள்மூலம் தனிப் பட்டாவாக்க அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது கூட்டுப் பட்டா இருப்பதை பலர் வரவேற்கிறார்கள். உறுப்பினர்கள் சொன்னதைக் குறித்து சர்க்கார் நடவடிக்கை எடுத்து, பரிசீலனை செய்யும்.

திருமதி கே. பி. ஜானகியம்மாள் : தலைவர் அவர்களே, கிராமப் பகுதிகளில் கூட்டுப் பட்டாவை தனிப் பட்டாவாக மாற்ற வேண்டுமென்று பல வருடங்களாக ஜமாபந்தியில் கூட மனு கொடுத்தும் அது கவனிக்கப் படாமல் இருக்கிறது. கூட்டுப் பட்டாவிலிருந்து தனிப் பட்டாவாக மாற்ற வேண்டுமென்று கேட்டால் அதற்கு அனுமதி வாங்குவதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. ஆகவே, ஒரு திட்டவட்டமான நடவடிக்கைகளை

1968 மார்ச் 2]

எடுத்து, கூட்டுப் பட்டாவை தனிப் பட்டாவாக வழங்குவதற்கு எந்த விதமான ஆட்சேபணேயும் இல்லே என்ற முறையில் விவசாயிகளுக்குப் பாதுகாப்பு கொடுக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது ஹரிஜனங்களுக்குப் பட்டா வழங்குவது சம்பந்தப்பட்ட கேள்வி. ஹரிஜனங்கள் மொத்தமாக இருந்தால்தான் சலுகைகள் கொடுக்க அவர்களுக்கு நல்ல முறையில் பயன் ஏற்படக் கூடும் என்ற வகையில்தான் இதைப் பலர் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

திரு. டி. மார்டின்: பேரவைத் தலேவர் அவர்களே, ஹரிஜன மக்களுக்கு அரசால் கொடுக்கப்படுகின்ற மானியங்கள், கடன்கள் அனேத்தும் மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு வழங்கப்படுகிறதா ? அப்படி மானியங்கள், கடன்கள் வழங்கப்படாமல் இருந்தால் அந்த பாரபட்சத்தை நீக்குவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இது போன்ற ஒருசில மானியங்கள் தான் தரப்படுகின்றன. வீடுகள் கட்டுவதற்கு மானியத் தொகை மட்டும் தரப்படுகிறது. விவசாயக் கிணறுகள் வெட்டுவதற்கும், அல்லது உழவு மாடு வாங்குவதற்கும் மானியம் தரப்படவில்லே என்று கருதுகிறேன்.

பதிவுத் துறை

* 125 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :
திரு. என். எஸ். வி. சித்தன் : } மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Registration Department-ல் Section Writers எத்தனே பேர் சிக்கன நடவடிக்கைகள் காரணமாக வேலேயிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் ?

(இ) இதனுல் அரசாங்கத்திற்கு மீதமாகும் தொகை என்ன ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : (அ) வேலே வாய்ப்பகத்தின் மூலம் நியமிக்கப்பட்ட அறுபத்தி மூன்று தற்காலிகப் பட்டியலில் சேராப்பிரிவு எழுத்தர். " கோப்புமுறை " செயல்படுத்தப்பட்டதே இதற்குக் காரணம்.

(இ) திங்கள் ஒன்றுக்கு 7,370 ரூபாய் மிச்சமாகிறது.

*126 வினு—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) Registration Department-ல் 1—3—1967-ல் எத்தனே Inspector-கள் Posts ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(இ) இவர்களின் Scale of Pay என்ன ?

(உ) ஒரு வருடத்தில் இந்த புது post-யினுல் அரசாங்கத்திற்கு எவ்வளவு அதிக செலவு ஏற்படுகிறது ?

(எ) District Registrar Annual Inspection அன்னியில் காரியாலயங்களுக்கு Surprise visit செய்ய வேண்டும் என்ற புது உத்தரவால் இவர்களுக்கு வருடாந்தர T.A. செலவு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) நான்கு பதவிகள்.

(இ) ரூபாய் 600—30—900 (மாதம் ஒன்றுக்கு).

(உ) ரூபாய் 79,000.

(எ) ரூபாய் 2,315 (கடந்த மூன்ருண்டுகளின் சராசரி).